# தொடக்கக் கல்வி இயக்ககம்

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை/ தொலை பேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | <u>இலவச பாடநூல் வழங்குதல்</u> | 1 முதல் 8–ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ / மாணவிகள் அரசு பள்ளி / நகராட்சி / நிதியுதவி பெறும் பள்ளி / நிதியுதவி பள்ளியில் சுயநிதியில் நடைபெறும் பிரிவுகள் | பள்ளியில் பயின்று கொண்டு இருக்க வேண்டும். சான்று ஏதும் அவசியமில்லை | அந்தந்த மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் மற்றும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் | தொடக்கக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், கல்லூரிச்சாலை, சென்னை–600006. தொலைபேசி எண்.28271169 நிகரி எண்.28217583 |
| 2.<br><br><br>2(a) | <u>இலவச சீருடை வழங்குதல்</u><br><br><br><u>இலவச நோட்டுப்புத்தகம்</u> | 1 முதல் 8–ம் வகுப்பு வரை மேற்படி பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகள் (சத்துணவு உண்பவர்களுக்கு மட்டும்)<br><br>மேற்படி ஆதிதிராவிட மாணவர்களுக்கு 4 முதல் 8ஆம் வகுப்பு வரை(ஆதிதிராவிடர் நலத்துறை வழங்குகிறது) | பள்ளியில் பயின்று கொண்டு இருக்க வேண்டும். சான்று ஏதும் அவசியமில்லை. | அந்தந்த மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் மற்றும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் | தொடக்கக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், கல்லூரிச்சாலை, சென்னை–600006. தொலைபேசி எண்.28271169 நிகரி எண்.28217583 |
| 3 | <u>கல்வி உதவித்தொகை</u><br>அரசு/உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவிகளின் தாய்/தந்தை விபத்தில் இறந்தாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப் படுகின்ற மாணவ / மாணவிகளுக்கு கல்வியை தொடர்ந்து பயிலவும், அவர்களின் பராமரிப்புக்காகவும் அரசு உதவித் தொகையாக ரூ.50000/–த்தினை, மாணவ/மாணவிகளின் பெயருடன், பாதுகாவலர் மற்றும் சார்ந்த மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலரும் இணைந்து, தமிழ்நாடு பவர் பைனான்ஸ் நிறுவனத்தில் முதலீடு செய்து, ஆண்டு தோறும் அதில் கிடைக்கும் வட்டித் தொகையினை பாதுகாவலர் பெயரில் காசோலையாகஅனுப்பப்படும். கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் இவ்வைப்புத்தொகை முதிர்வுடன் கூடிய தொகையாக மாணாக்கர்கள் பெற்றுக் கொள்ளலாம். | 1) அரசு / உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியராக இருத்தல் வேண்டும்.<br><br>2) தாய் /தந்தை விபத்தில் இறந்தாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ மட்டும் இத்திட்டத்தில் பயன் பெற முடியும். இத்திட்டம் அரசாணை (நிலை) எண்.39, பள்ளிக்கல்வி (இ2) துறை நாள் 30.3.05–ல் வெளியிடப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்ட நாள் முதல் அமுலுக்கு வருகிறது | 1) பெற்றோர் விபத்தில் இறந்தால், இறப்புச் சான்றிதழ் இணைக்கப் பட வேண்டும். நிரந்தர முடக்கம் அடைந்த வராக இருந்தால் அரசு மருத்துவமனையில் சிவில் சர்ஜனிடம் சான்று பெற்றுத் தர வேண்டும். (வெள்ளைத்தாளில் விண்ணப்பிக்கவும்)<br>2) வாரிசுச் சான்றிதழ்<br>3) மாணாக்கர்புகைப்படம்<br>4) பள்ளியில் பயின்று வருவதற்குரிய பரிந்துரையுடன் கூடிய அடையாளச் சான்றிதழ். | மாணவ/மாணவிகள் தங்கள் மனுக்களை உரிய இணைப்புகளுடன் அவர்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியரிடம் கொடுக்க வேண்டும். தலைமையாசிரியர் அதனை பரிசீலித்து சார்ந்த மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலருக்கு பரிந்துரைக்க வேண்டும். | தொடக்கக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், கல்லூரிச்சாலை, சென்னை–600006. தொலைபேசி எண்.28271169 நிகரி எண்.28217583 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை/ தொலை பேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| | | | 5) வங்கிக் கணக்கு புத்தக நகல். (இல்லையென்றால் புதிய கணக்கு தொடங்க வேண்டும்)<br>6) படிவம் : தமிழ்நாடு மின்சார வாரியம் Power Finance Corporation, Anna Salai, Chennai-2 ல் பெறப்பட்ட விண்ணப்பத்தில் மாணவர் கையொப்பம் /காப்பாளர் அல்லது உயிருடன் உள்ள தாய் அல்லது தந்தையின் கையெழுத்துடன் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலரின் கையொப்பம். | உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் வழியாக அனுப்பி வைக்க வேண்டும். | |